THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

M.C.O.P.No. 55/2016

Deposition of PW.1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Evidence Act X 1872 on 11.03.2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. லட்சுமணன் | Caste | : | |
| S/o & W/o. | : | த/பெ. கோவிந்தன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

<u>முதல் விசாரணை</u>

எனது சத்திய பிரமாண வாக்கு மூலம் தாக்கல். அதில் கண்ட சங்கதிகளை படிக்க கேட்டு அவைகள் உண்மை என தெரிந்து கைரேகை செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான்.

1. ம.சா.ஆ.1– 09.05.2016– முதல் தகவல் அறிக்கை – உண்மை நகல்
2. ம.சா.ஆ. 2– 09.05.2016– மாதிரி வரைடம் – உண்மை நகல்
3. ம.சா.ஆ. 3–12.10.2016– காயச்சான்றிதழ் – அசல்
4. ம.சா.ஆ. 4– 24.05.2016– விடுவிப்பு அறிக்கை – 7 எண்ணிக்கை – அசல்
5. ம.சா.ஆ. 5– 13.06.2016– விடுப்பு அறிக்கை – அசல்
6. ம.சா.ஆ– 6– 07.09.2016– விடுப்பு அறிக்கை – 7 எண்ணிக்கை – அசல்
7. ம.சா.ஆ– 7– 09.12.2016– விடுப்பு அறிக்கை – அசல்
8. ம.சா.ஆ. 8– 09.05.2016– கதிரியக்கவியல் மருத்துவ ஆய்வறிக்கை – அசல்
9. ம.சா.ஆ– 9– 06.06.2016– கதிரியக்கவியல் மருத்துவ ஆய்வறிக்கை – அசல்
10. ம.சா.ஆ– 10– 03.07.2016– கதிரியக்கவியல் மருத்துவ ஆய்வறிக்கை – அசல்
11. ம.சா.ஆ.11– 05.09.2016– கதிரியக்க மருத்துவ ஆய்வறிக்கை – அசல்
12. ம.சா.ஆ. 12– 16.09.2016 கதிரியக்க மருத்துவ ஆய்வறிக்கை – அசல்
13, ம.சா.ஆ.13– மருத்துவ பில்கள் 209 எண்ணிக்கை ரூ. 4,44,142/–– அசல்
14. ம.சா.ஆ. 14– மனுதாரரின் ஆதார் அட்டை – போட்டோ நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. ஜெராக்ஸ்
15. ம.சா.ஆ. 15– மனுதாரரின் குடும்ப அட்டை – போட்டோ நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது– ஜெராக்ஸ்
16. ம.சா.ஆ. 16– மனுதாரரின் பான் கார்டு – போட்டோ நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது– ஜெராக்ஸ்
17. ம.சா.ஆ– 17– மனுதாரரின் வங்கிக்கணக்கு புத்தகம் முதல் பக்கம் – போட்டோ நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது.
18. ம.சா.ஆ. 18– TN 52 Y 7852 என்ற பதிவு எண் கொண்ட TATA ACE வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ் – போட்டோ நகல்
19. ம.சா.ஆ. 19– மாற்று திறனாளிகள் நல துறை வழங்கிய அடையாள அட்டை( அதில் எனது ஊனம் 80 சதவீதம் என குறிப்பிடப்பட்டுள்ளது). – போட்டோ நகல் அசலுடன்

ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>3ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து தொடர்பாக காவல்நிலையத்தில் என் சகோதரர் சின்னகண்ணு புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். விபத்து 08.05.2016 அன்று அதிகாலை 2.00 மணிக்கு என்றால் ஆமாம். ஆனால், புகார் கொடுத்தது மறுதினம் மதியம் 1.00 மணி என்றால் சரிதான். சம்பவத்தின் போது நான் பயணம் செய்த டாடா ஏசி வாகனத்தில் ஓட்டுனருடன் நானும் பயணித்தேன். வேறு யாரும் இல்லை. போலிசில் புகார் கொடுத்த என் சகோதரர் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம். ம.சா.ஆ. 3 மற்றும் 4 ஆவணங்களான காயச்சான்றிதழ் மற்றும் டிஸ்சார்ஜ் சம்மரியில் 08.05.2016ம் தேதியன்று கிருஷ்ணகிரி- தருமபுரி ரோட்டில் சாலையில் லாரி நான் பயணித்த ஆட்டோவின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ள சங்கதி உண்மை தான். கங்கா மருத்துவமனைக்கு என்னை என் மகன் பெருமாள் அழைத்து சென்றார் என்றால் ஆமாம். விபத்து நடந்த அன்றே காலை 11.40 மணிக்கு கங்கா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன் என்றால் ஆமாம். என் மகன் பெருமாள் விபத்து எப்படி விவரம் தெரியும் என்றால் ஆமாம். அவர் விபத்தை நேரில் பார்க்கவில்லை. ம.சா.ஆ. 3 ஆவணத்திற்கு பிறகு மறுநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். சம்பவத்தின் போது எனக்கு உரிமையான மங்காய் லோடை இறங்கிவிட்டு திரும்பவும் வண்டியில் வரும்போது தான் இவ்வழக்கு சம்பவம் ஏற்பட்டது என்று சொன்னால் ஆமாம். நான் போட்ட மனுவில் சம்பவத்தின் போது இரு வாகனங்கள் ஈடுபட்டுள்ள காரணத்தினால் இரு வாகனத்தின் காப்பீட்டுயாளர்கள் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் கேட்டுள்ளேன் என்றால் ஆமாம். சம்பவத்தின் போது நான் அனுமதியற்ற பயணியாக நான் சென்ற வாகனத்தில் பயணம் செய்துள்ள காரணத்தால் எந்தவிதமான காப்பீடு எனக்கு இல்லை என்பதால் எனவே, 3ம் எதிர் மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனவே, 3ம் எதிர் மனுதாரரை பொறுத்து இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனது வயது, எனது மாத வருமானம் ஆகியவைகளை காண்பிக்க ஆதரங்கள் தாக்கல் என்றால் சரியல்ல. ம.சா.ஆ- 19 ஆவணம் அரசாங்கம் எனக்கு

வழங்க கூடிய சலுகைகளை பெறக்கூடிய வழங்கப்பட்ட ஆவணம் என்பதால் அதில் குறிப்பிட்டுள்ள ஊன சான்றிதழ் ஏற்புடையதது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/திரு. பாலமுருகன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.